பக்கங்கள்: 11 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 18 செவ்வாய்க்கிழமை 31.03.2020 | கதிர் 14

# வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 346 பேருக்கு ஏப். 6 இல் விடுதலை!

விசேட செய்தி

(எஸ். நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மட்டும் கொரோனா தொற்று அச்சம் காரணமாக 346 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் கொரோனா தொற்று இல்லாத சந்தர்ப்பத்தில் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

2

## கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் அறிவிப்பு

# நெருக்கடி நிலைமை 6 மாதங்கள் நீடிக்கும்!

## அதை சமாளித்துக் கையாள்வதற்காக நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள்



கொழும்பு,மார்ச்31

"மருத்துவ, நிபுணத்துவ ஆலோசனைகளின் படி இந்த நெருக்கடி நிலைமை குறைந்தது இன்னும் ஆறு மாதங்களுக் காவது நீடிக்கும். பரவும் கொரோனா வைரஸை நாங்கள் வெற்றிகர மாகக் கட்டுப்படுத்தினாலும் கூட அடுத்த ஆறு மாத காலத் துக்கு இந் தச் சூழ்நிலைதான் நீடிக்கப் போகின்றது."

- இவ்வாறு எச்சரித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், அதனால் இந்த நெருக்கடி நிலையைச் சட்ட ரீதியாகக் கையாள்வதற்காகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காகவும், இப்போது கலைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ இனியும் காலம் தாமதிக்காமல் உடன் மீளக் கூட்டுவதற்கான உத்தரவை பிரத்தியேகமாக விடுக்கவேண்டும் எனக் கோரினார்.

3

## தாய்நாட்டைக் காப்பதற்கு மக்களே ஒத்துழையுங்கள்!

### யாழ். தளபதி கோரிக்கை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 31

உலகம் முழுவதும் மிகவிரைவாகப் பரவி வரும் கொரோனா கிருமியிடமிருந்து எமது தாய் நாட்டைக் காப்பதற்காக அனைத்து மக்களும் தமது முழு ஒத்துழைப்புக்களை வழங்கி ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் இது என யாழ்.பாதுகாப்புக்

2

## ரூ 1250 கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

தென் கடற்பரப்பில் 1250 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

தென்மாகாணக் கடற்பரப்புக் குரிய 463 கடல் மைல் தொலைவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக் கையின்போது

ஐஸ் ரகப் போதை பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## அமெரிக்காவில் இலங்கையர் இன்று உயிரிழப்பு

வெளிநாட்டில் கொரோனாவினால் பீடிக்கப்பட்டு மற்றுமொரு இலங்கையர் உயிரிழந்த சம்பவம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே வெளிநாடுகளில் இரு இலங்கையர்கள் இந்த வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

2

## 16 பேர் இதுவரை மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களில் மேலும் இருவர் இன்று குணமடைந்தனர்.

அத்துடன், 104 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கையில் இதுவரை 122 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இவர்களில் இருவர் உயிரிழந்தனர்.16 பேர் இதுவரை மீண்டனர்!

16 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர். 173 பேர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

## நேற்று உயிரிழந்தவரின் குடும்பமும் தனிமையில்

கொழும்பு, மார்ச் 31

கொரோனா கிருமித் தாக்கத்தினால் உயிரிழந்த இரண்டாவது நபரின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவரது குடும்ப உறுப்பினர்கள் 13 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2

## இன்று மட்டும் 10 பேருக்கு தொற்று!

கொழும்பு, மார்ச் 31

கோரோனா வைரஸ் தொற்றால் மேலும் 10 பேர் இன்று (மார்ச் 31) செவ்வாய்க்கிழமை மாலை 4.15 மணிவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 132ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

2

## உயிழுந்தவரின் உடல் எரிப்பு; கண்டிக்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்த இரண்டாவது நபரின் உடல் இஸ்லாமிய சமய வரையறைகளுக்கு முரணான வகையில் எரிக்கப்பட்டமை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையில்,

2

## செய்தி அதிகம் தேடாதீர்! சத்தியமூர்த்தி அறிவுரை

யாழ்ப்பாணம், மார்ச் 31

அளவுக்கு அதிகாமாக நோய் பற்றிய செய்திகளையும் வீடியோக்களையும் பார்வையிடுதல் மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடும் என யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் –

2

### பலியான 2ஆவது நோயாளியால்

## ஐந்து சந்தியில் 130பேர் தனிமையில்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 31

கொரோனோ தொற்றினால் உயிரிழந்த இரண்டாவது நோயாளி யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இடம் முற்றுகையிடப்பட்டு அவர் கலந்துகொண்ட

2

## உதயகுமாருக்கு இல்லையாம் கொரோனா!

மட்டக்களப்பு, மார்ச் 31

அரசியல் லாபத்திற்காக என்னைப் பழிவாங்கும் எண்ணத்தில் செயற்பட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரச அதிபர் மா.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் - The Distinctive Voice of The Tamil Speaking People

## தாய்நாட்டைக் காப்பதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான்வணிகசூரியதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். குடாநாட்டுக்குள் உட்புகுதல் மற்றும் வெளிச்செல்லலுக்கான வீதிகள் இரண்டு உள்ளன. அந்த இரண்டு வீதிகளிலும் போக்குவரத்துகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் உங்களிடமிருந்து கிடைக்கும் போது கொடிய தொற்றான கொரோனா கிருமியைக் கட்டுப்படுத்த முடியும்.

உயிர்க்கொல்லி தொற்றான கொரோனா கிருமியை எமது நாட்டிலிருந்து தூரமாக விரட்டி உங்களுக்கான வாழ்க்கையை முன்பிருந்த காலச் சூழலில் இருந்தது போன்று நடத்திக் கொண்டு செல்வதற்கு அரசின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரிவின் மூலமாக நடத்தப்படுகின்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் அவர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொடிய தொற்றான கொரோனா கிருமியின் பாதிப்புக்குட்பட்ட உலகின் மற்றைய நாடுகளுடன் எமது நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கையில் இந்த கிருமித் தொற்று பரவுவதைத் தடுக்கும் முயற்சியானது மிகவும் பலனளித்துள்ளமையாலும் எடுக்கும் முழு முயற்சிகளினாலும் எமது நாடு மற்றைய நாடுகளை விட முன்னோக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். பிரதேசத்தினுள் இதுவரை ஒரு நோயாளி மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் அதேவேளை அந்த நபருக்கு வெளிநாட்டவர் மூலமாகவே இந்த கொரோனா தொற்று பரவி இருக்கிறது. இன்றுவரை அந்த நோயாளிக்கு மாத்திரம் பரவியிருப்பதும் யாழ்ப்பாண மக்களாகிய நீங்களும் அரச பாதுகாப்பு பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் ஆற்றப்பட்ட பரிகாரத்தின் பலனாகவே கிடைக்கப்பெற்றது என்பதனைக் கூறிக் கொள்ள முடியும்.

இப்பிரதேசத்தில் இருக்கின்ற இந்த நிலை இதுபோன்றே தொடரவும் மேலும் வேறு நோயாளிகள் பெருகாமல் இருக்கவும் நாம் முயற்சிக்கவேண்டும். எனவே உங்களுடைய ஒத்துழைப்புக்களையும் வேண்டி நிற்கின்றோம்.

இந்நிலையில் போடப்பட்டிருக்கின்ற ஊரடங்குச் சட்டமானது உங்களது பாதுகாப்பிற்காகவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் பாதுகாப்புப் பிரிவினருக்கு உங்களது ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இருப்பினும் அத்தியவசியமான சேவையை மேற்கொள்வதற்கும் அத்தியாவசிய உணவுக்கான போக்குவரத்து மற்றும் விவசாய வேலைகளை மேற்கொள்ளவும் போடப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்ட நேரங்களில் சிறு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் உங்களுடைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

விசேடமாக வீட்டினுள்ளே இருக்கும் நீங்கள் உங்களுடைய அயலவர்களுடன் உங்களது நேரத்தைச் செலவிடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். தமது அன்றாட வேலைகளில் ஈடுபடும் போது ஒருவர் மற்றவருக்கிடையில் குறைந்தது ஒரு மீற்றர் தூரத்தைப் பேணுவதுடன் மணித்தியாலத்திற்கு ஒரு தடவை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அறிவுறுத்தலிற்கு அமைய கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவிக்கொள்ளவும்.

இந்தப் பாரதூரமான உயிர்க் கொல்லி நிலைக்கு முழு உலகமும் இன்று முகம் கொடுக்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டிருக்கின்றது. முற்காலத்திலும் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இதுபோன்ற தொற்றின் காரணமாக உயிரிழந்தமை வரலாற்றில் கூறப்பட்டிருக்கின்றது. இவை அனைத்திலும் விட அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு கொடிய தொற்றே இக் காலகட்டத்தில் பரவி இருக்கின்றது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அத்துடன் அரச பாதுகாப்புப் பிரிவு சுகாதாரப் பிரிவு மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகச் சரிவர கடைப்பிடிக்கவேண்டும் என்று நான் யாழ்ப்பாண மக்களிடம் மிக தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார். (ஐ - 07)

## செய்தி அதிகம் தேடாதீர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாளில் ஒருசில தடவைகள் மாத்திரம் இந்நோய் நிலை பற்றிய தகவல்களுக்காக நம்பிக்கையான வலைத்தளங்களைப் பார்வையிடுங்கள். அளவுக்கு அதிகமாக நோய்பற்றிய செய்திகளையும் காணொலிகளையும் பார்வையிடுதல் மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடும்.

மன உளைச்சல் பசி, தூக்கம் என்பவற்றைப் பாதிக்கின்றது. உளநல ஆரோக்கியத்தோடு நிறையுணவு, அமைதியான நித்திரை ஆகியவற்றால் பல நோய்களுக்கெதிரான நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்படுகின்றது. தற்போது பல சுகதேகிகள் அநாவசியமான மன உளைச்சலுக்கு உள்ளாகி தமது நோயெதிர்க்கும் ஆற்றலை தாமே குறைப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலமையில் தேவையற்ற செய்திகளைப் பார்ப்பதும் பகிர்வதும் தம்மையும் தம்சார்ந்தவர்களையும் மன உளைச்சலுக்குள்ளாக்கி நோயெதிர்ப்பை பாதிக்கும் தவறான செயல்களாகும். அடிக்கடி செய்திகளைப் பகிர்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆகவே, தேவையற்ற செய்திகளையும், காணொலிகளையும் பார்ப்பதையும் பகிர்வதையும் தவிர்த்து ஒருசில முக்கியமான செய்திகளை நம்பத்தகுந்த மூலங்களிலிருந்து பெறுவதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள் – எனக் கூறியுள்ளார்.

## ஐந்து சந்தியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகளில் பங்கேற்றவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். நகரை அண்மித்த ஐந்து சந்திப் பகுதியிலேயே அவர் தங்கியிருந்ததால் அந்தப் பகுதி இன்று காலை முதல் சோதனையிடப்பட்டு அங்குள்ள பல குடும்பங்களைச் சேர்ந்த 130 பேர் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உலகை உலுக்கி வருகின்ற கொரோனா தாக்கத்தில் இலங்கையிலும் இருவர் உயிரிழந்துள்ளனர். இதில் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர் யாழ். ஐந்து சந்திப் பகுதியில் தங்கியிருந்துள்ளார். அத்தோடு திருமண நிகழ்வொன்றிலும் கலந்து கொண்டிருந்தார். பின்னர் அவர் மீண்டும் கொழும்பு சென்றுள்ளார்.

அங்கு அவருக்கு நோய் ஏற்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்திருந்தார். ஆயினும் மேலதிக சிகிச்சைகளுக்காக தேசிய தொற்றுநோயியல் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை உயிரிழந்தார்.

கொரோனா தொற்றினாலேயே அவர் உயிரிழந்த நிலையில் அவர் தங்கியிருந்த மற்றும் சென்று வந்த இடங்கள் முற்றுகையிடப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையிலையே அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்ததால் அவர் தங்கியிருந்த இடமும் சுற்றிவளைக்கப்பட்டு அவருடன் நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர், பொலிஸார் இணைந்து முன்னெடுத்தனர்.

## உதயகுமாருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா நோய்த் தொற்று இல்லை எனச் சுகாதார வைத்திய அதிகாரிகள் தமக்குச் சான்று தந்துள்ளார்கள் எனவும் அவர் கூறினார்.

அவரின் தேர்தல் பிரசாரத்துக்காக வெளிநாட்டில் இருந்து வந்த நண்பருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இதனை அடுத்து வைத்தியரின் ஆலோசனையின்பேரில் உதயகுமார் தன் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

தற்போது தனிமைப்படுத்தல் காலம் முடிவுற்ற பின்னர் இன்று அவரது வீட்டில் இருந்து காணொலி மூலம் அவர் இதனைக் கூறினார்.

## நேற்று உயிரிழந்தவரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று உயிரிழந்த நபர், தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நீர்கொழும்பு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்தத் தனியார் மருத்துவ மனை ஊழியர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

## வடக்கில் தனிமைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் சுவிஸ் போதகருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என 20 பேர் காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மட்டும் 319 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 346 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொரோனா தொற்று இல்லாத சந்தர்ப்பத்தில் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளனர் – என்றார்.

## இன்று மட்டும் 10 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் 16 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் கோரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 173 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர். (ஐ)

## 1250 கோடி ரூபா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெத்தபிட்டமின் என அழைக்கப்படும் ஐஸ் ரக போதைப் பொருள் 500 கிலோ கிராமும் கொக்கெய்ன் எனச் சந்தேகிக்கப்படும் 500 கிலோ கிராம் போதைப் பொருளும் இதன்போது மீட்கப்பட்டன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அமெரிக்கா – நியூயோர்க்கில் வசித்துவந்த 50 வயது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பல ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்துவருபவர். அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## ஊரடங்கை மீறிய 7,358 பேர் கைது!

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 7,358 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவ தற்காக இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த 20ம் திகதி மாலை 6 மணி முதல் இன்று காலை வரையான காலப்பகுதிக்குள் 7,358 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என 1,768 வாகனங்களும் அவர்களிடம் இருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

## உயிழந்தவரின் உடல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பலகத்துறை பிரதேசத்தில் வசித்து வந்த முஹம்மத் ஜமால் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த பின்னர், இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு அமைவாக அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட அனுமதிக்கப்படாமை துரதிர்ஷ்டவசமானதும் வருத்தத்தக்கதுமாகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

குறுகிய நேரத்துக்குள் அரச மற்றும் மருத்துவத் துறையினருடன் தொடர்பு கொண்டு ஜனாஸா எரியூட்டப்படுவதைத் தடுப்பதற்கு அவசர அவசரமாக மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

பாரியளவில் வியாபித்து பரவிவரும் தொற்றுநோய் என்றாலும், சமய உணர்வுகளுக்கு மதிப்பளித்து மேற்படி ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் பதவி வகிக்கும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் டாக்டர் சுஹைல் மற்றும் எமது கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா போன்றோர் நடுநிசிவரை முயற்சித்துள்ளனர்.

நல்லடக்கம் செய்வது பற்றி எடுத்துக் கூறப்பட்ட போதிலும், நீர்கொழும்புப் பிரதேசத்தில் பத்து அடி ஆழத்தில் குழி தோண்ட வேண்டியுள்ளதால் அங்கு நிலத்தடி நீர் மட்டம் உயர்வாக இருப்பதனால் நீர்க் கசிவு அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து கொழும்பு, மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், மாவட்டத்துக்கு வெளியில் ஜனாஸாவைக் கொண்டு செல்வதற்கு சட்ட மருத்துவ அதிகாரியினால் அனுமதி வழங்கப்படவில்லை. மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட்டிருந்த நிலையில் நீதவானின் விசாரணைகூட ஒரு பொருட்டாக இருந்திருக்கமாட்டாது.

குடும்பத்தவர்களின் உணர்வுகளையும், வேண்டுகோளையும் கருத்திற்கொள்ளாது ஜனாஸாவை எரிப்பதில் அவசரம் காட்டப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எமது நிலைப்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அறிகின்றோம். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கும், சட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் இடையில் இது சம்பந்தமான கூட்டத்தில் உரிய சுற்றறிக்கையை மீளாய்வு செய்வது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் அறிகிறோம்.

எங்களது சமய ரீதியான உரிமையை நாங்கள் வலியுறுத்தும் அதே வேளையில், தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு நிலைமையை மேலும் சிக்கலாக்காமல், யதார்த்தபூர்வமான நடைமுறைச் சாத்தியமுள்ள தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் – என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மீளவும் நாடாளுமன்றத்தை கூட்டுவது மிக அவசியமானது

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஒரு பெரும் நெருக்கடிக் குண்டு ஒன்றைப் போட்டிருக்கின்றார்.**

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் பேரச்ச நிலையில் அவர் வெளியிட்டிருக்கும் தகவல் பெரும் அதிர்ச்சிக் குண்டுதான்.**

**அது உண்மையாக இருக்கலாம். அதுதான் யதார்த்தக்கள நிலைமையாக இருக்கலாம். ஆனால் பதற வைக்கும் – காலங்கடிக்கும் – விடயமாக அது உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.**

**கொரோனாத் தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள உலகப் பெரு நெருக்கடி – தற்போதைய நிலைமை – இன்னும் ஓரிரு வாரங்கள் அல்ல, ஓரிரு மாதங்கள் அல்ல, அதையும் தாண்டி குறைந்தது ஆறு மாதங்களுக்காவது நீடிக்கப் போகின்றது என்ற, நாம் நம்ப மறுகின்ற அல்லது நம்ப விரும்பாத யதார்த்தத்தை மருத்துவ நிபுணர்களின் கருத்தாக அம்பலப்படுகின்றார் சுமந்திரன்.**

**இந்த வைரஸ் தொற்றை இப்போதைய நிலையில் நாங்கள் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தினாலும் கூட, ஆறுமாத காலத்துக்கு இந்தச் சூழ்நிலையே நீடிக்கப் போகின்றது என்ற தகவல் எங்களை மலைக்க வைக்கும் நிஜமாக உள்ளது.**

**இரண்டு வார கால ஊரடங்கிலேயே நமது மக்கள் சுருண்டு போனார்கள். பசியும் பட்டினியும் பற்றிய குரல்கள் ஆங்காங்கே எழத் தொடங்கி விட்டன.**

**ஒரு புறம் ஊரடங்கு. மக்கள் அசைவியக்கத்துக்குக் கட்டுப்பாடு. சமூக இடைவெளியைப் பேணுமாறு நெருக்குவாரம். நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்துக்கும் முற்றாகத் தடை.**

**மறுபுறம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சமூக மையங்கள், மத நிலையங்கள் யாவும் மூடப்பட்டு விடுமுறை.**

**உற்பத்தி இல்லை. உழைப்பு இல்லை. வேதனம் இல்லை. வருமானம் இல்லை.**

**வீட்டின் வருமானம் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரமே படுத்தவிட்டது.**

**இரு வார காலத்துக்குள்ளேயே இந்த நிலைமை என்றால், இது ஆறு மாத காலம் நீடிக்கும் என்றால் அந்த நிலைமையைக் கற்பனை பண்ணியே பார்க்க முடியவில்லை.**

**சீனாவில் வுகான் மாகாணத்தில் பரவத் தொடங்கிய 'கொரோனா வைரஸ்' என்ற பேரரக்கன் இலங்கையில் தன்கைவரிசையைக் காட்டாமல் இருப்பதற்கு எங்கள் தரப்பில் – இலங்கை நாட்டின் பக்கத்தில் – என்ன முன் ஆயத்தம் செய்யப்பட்டது என்பதுதான் இப்போது கேள்வி.**

**தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் பெப்ரவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.**

**ஆனால் தொடர்ந்து பயனுள்ள விவாதங்களோ தொடர் நடவடிக்கைகளோ அங்கும் (நாடாளுமன்றத்துக்குள்ளும்) எடுக்கப்படவில்லை. வெளியிலும் (நாடாளுமன்றத்துக்கு வெளியிலும்) எடுக்கப்படவில்லை.**

**இன்றைய எமது இந்த நெருக்கடி நிலைக்கு – இக்கட்டுச் சூழலுக்கு – அந்தக் காலகட்டத்தில் போதிய முன்னெச்சரிக்கை மற்றும் முன்னாயத்த நடவடிக்கைகளை இலங்கை அரசும் ஆட்சித் தரப்பும் எடுக்காமல் இருந்தமையும் பிரதான காரணமாகும்.**

**சுமந்திரன் சுட்டிக்காட்டுகின்றமைபோல இந்த வைரஸ் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு விஞ்ஞானபூர்வமாகச் சிந்தித்து, சாதக பாதகங்களை ஆராய்ந்து, நிபுணத்துவ வழியில் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். அது இன்றியமையாத கட்டாயம்.**

**அந்நடவடிக்கை ஜனாதிபதி என்ற தனி மனிதரை மட்டும் நம்பி, அவரில் தங்கியிருப்பதாக அமைவது பொருத்தமானதல்ல.**

**இவ்வாறு தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மிகமிக முக்கியத்தவம் வாய்ந்த ஒரு விடயத்தை நாடு எதிர்கொள்கையில் மக்களை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளின் பங்களிப்பும் அந்த விடயத்தில் உரிமையுடன் சம்பந்தப்பட வேண்டும்.**

**அதனால்தான் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் விரைந்து கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதாகப்படுகின்றது.**

**கட்சிகள் தாண்டி – தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள், அரசியல் காழ்ப்புணர்வுகள் என்பவற்றைக் கடந்து – இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவது – வற்புறுத்துவது – நாட்டின் அனைத்துத் தரப்பினரதும் கடமையும், பொறுப்புமாகின்றது.**

# நெருக்கடி நிலைமை 6 மாதங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இன்று காணொலி மூலம் கருத்து வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:–

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சூழ்நிலையிலே தனியான அதிகாரமாகத் தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை உபயோகித்து இந்தச் சூழ்நிலையைத் தானே அவர் கையாண்டு கொண்டிருக்கிறார். இதிலே அவர் எடுத்த பல நடவடிக்கைகள் நல்லவை. நாட்டிலே அந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான இந்த நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பை கொடுப்போம் என்று சொல்லியிருக்கின்றோம். ஆதரவைத் தெரிவித்திருக்கிறோம்.

ஆனால், அதே வேளையிலே, இப்படியான நடவடிக்கைகள் மூலமாக மட்டும்தான் இந்த வைரஸ் பரவுவதை தடுக்க முடியுமா அல்லது இதை விடச் சிறப்பான வழிகளிலே கூடுதலாக மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணமாக – மக்கள் பசி, பட்டினியாலே கஷ்டப்படாத வண்ணமாக – நாங்கள் இதனைக் கையாளமுடியுமா என்பதையும் நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதற்காகத்தான் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது என்று சொல்லுகின்றபோது அந்த ஒரே இடத்திலே 225 பேரும் சேர்ந்து கூட வேண்டும் என்று அர்த்தப்பட முடியாது. இன்றைக்கு மாலைதீவிலே நாடாளுமன்றம் இணையத்தின் மூலமாக சந்திக்கிறார்கள். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியிலே நாங்கள் இதனை பலவிதமாகக் கையாளலாம். நாங்கள் ஒரே இடத்திலே சேர வேண்டிய அவசியம் கிடையாது. அனால் ஒரு ஜனநாயகக் கட்டுப்பாட்டுக்குள்ளே சட்டத்தின் ஆட்சியின் படி இந்த விடயங்கள் கையாளபட வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக நாடாளுமன்றம் கூடப்பட வேண்டும். ஏனென் றால் நாடாளுமன்றத்திடம்தான் சட்டங்களை வகுக்கின்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கின்றது.

இன்றைக்கு ஊரடங்குச் சட்டம் சட்டபூர்வமாக இருக்கின்றதா இல்லையா என்று கேள்வி எழுந்திருக்கிறது. அந்த கேள்வி இருந்த போதிலும் கூட மக்களுடைய நன்மையை கருதி அது சட்ட பூர்வமா, இல்லையா என்பதைக் கேள்விக்குட்படுத்தாமல் ஊரடங்குச் சட்டத்துக்குக் கீழ்ப்படியுமாறு நாங்கள் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்திருக்கிறோம்.

ஆனால் நீண்ட நாள்களுக்கு இது இப்படியாகக் கடைபிடிக்க இயலாத ஒரு விடயமாகும்.

மருத்துவ ஆலோசனையின்படி இந்த நிலைமை குறைந்தது ஆறு மாத காலத்திற்காவது நீடிக்கும் என்று சொல்லுகிறார்கள். அதாவது இந்த வைரஸை நாங்கள் வெற்றிகரமாக கட்டுப்படுத்தினாலும் கூட குறைந்தது ஆறு மாத காலத்திற்காவது இந்தச் சூழ்நிலை நீடிக்க போகிறது. அப்படியானால் மக்களுடைய வாழ்க்கை எப்படியானதாக இருக்கபோகிறது? அவர்களுக்குத் தேவையான உணவு விநியோகம் எப்படியானதாக அமையும்? உணவு உற்பத்தி எப்படியானதாக இருக்க போகிறது?

ஆகையினாலே வெறும் ஊரடங்கு சட்டம் அல்லது எல்லாருமே வீட்டிலே இருங்கள் என்று சொல்லி விட்டு நாங்கள் தப்பித்து கொள்ள முடியாது. ஏன் என்றால் இந்த சூழ்நிலையையே கையாளுவதாக இருந்தால் இரண்டு விடயங்களை நாங்கள் கருத்திலே எடுக்க வேண்டும்.

ஒன்று – மக்களை ஒன்று சேராமல் தடுப்பது. அது ஊரடங்கு சட்டம் அல்லது இடங்களை முடக்குவதன் மூலமாக செய்யலாம்.

ஆனால் இரண்டாவது விடயம் – எப்படியாக மக்களுடைய உணவு மற்றும் மற்றைய தேவைகளை கவனிப்பது என்பது.

ஓர் உதாரணத்தைச் சொல்லுவதாக இருந்தால் தேயிலைக்கு இன்றைக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் தேயிலை உற்பத்தி செய்தால்தான் அதனை வழங்க முடியும். அதனால் தொழிலாளர்கள் வேலைக்கு போக வேண்டும். அதே போலத்தான் இந்த வைரஸை எதிர் கொள்வதற்குக் கூட மரக்கறிகள், பழ வகைகளை உட்கொள்ள வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதனால் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டும். அவை உற்பத்தி செய்யப்பட்டு, சரியாக விநியோகிக்கப்பட்டால்தான் அந்தப் பழ வகைகளையும் மரக்கறிகளையும் மக்களிடத்தே நாங்கள் கொண்டு சேர்க்கலாம். ஆனால் அப்படியாகச் செய்வதாக இருந்தால் மக்கள் வெளியில் சென்று வேலை செய்ய வேண்டும். உற்பத்தித் தொழிலிலே ஈடுபட வேண்டும்.

இது சம்பந்தமாக இந்த இரண்டு அந்தங்களுக்கும் இடையிலே ஒரு குறித்த நிலைப்பாட்டை நாங்கள் எடுக்க வேண்டும். மற்றய நாடுகளிலே நாடாளுமன்றங்கள் உடனடியாக இது சம்பந்தமாகச் சட்டங்களை இயற்றி இருக்கின்றார்கள். அதை நடைமுறைப்படுத்துவது யார் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் மருத்துவர்களுடைய ஆலோசனை, மருத்துவர்களுடைய மேர்பார்வை, உரிய சுகாதார அதிகாரிகளுடைய கையிலே இது இருக்க வேண்டும். தீர்மானங்களை எடுக்கின்ற – முடிவுகளை எடுக்கின்ற – திராணி அவர்களுக்குக் கொடுக்க படவேண்டும். இது சட்டத்தின் மூலமாகத்தான் செய்யப்படலாம்.

ஆகையினால்தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே சட்டங்களை உருவாக்குகின்ற அதிகாரமுடைய நாடாளுமன்றம் நிச்சயமாகா கூட்டுப்பட வேண்டும். இன்னொரு விடயம் நாடளுமன்றத்திற்குத்தான் முழு நிதி அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பிறகு ஜனாதிபதியினாலே நிதியைக் கையாள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஏப்ரல் 30க்குப் பிறகு அவருக்கு இருக்கின்ற அதிகாரம் மிகக் குறைந்ததாகத்தான் இருக்கின்றது. ஏற்கனவே நாடாளுமன்றம் நிறைவேற்றிய நிதி கொள்கைக்கு அமைவாகத்தான் அவர் செயட்படக்கூடியதாக இருக்கிறது.

ஆகையினாலே, இந்த அவசர கால நிலையை உத்தேசித்து, அரசமைப்புச் சட்டத்தில் இப்படியான அவசர கால நிலைமை ஏற்படடால் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு ஏற்கனவே அதிலே வசதி இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 70(7) என்கின்ற உறுப்புரையின் கீழே நாடாளுமன்றம் மீளக் கூடப்பட வேண்டியது அத்தியாவசியமாக இருக்கின்றது. நாடாளுமன்றம் மீளக் கூடப்பட வேண்டும் என்று சொல்கின்றபோது பலர் நையாண்டி செய்கிறார்கள். ஏளனம் செய்கிறார்கள். 225 பேர் தங்களுக்குச் சம்பளத்துக்காக இதைசொல்லுகிறார்கள்என்று. கூறுகின்றார்கள்.

ஆனால் எவர், எப்படிச் சொன்னாலும் எதேச்சாதிகாரமாக நிறைவேற்றுத்துறைஉம் இராணுவமும் இந்த விடயங்களைக் கையாளுகின்ற போக்கை நாங்கள் தவிர்க்க வேண்டும். சரியான முறையிலே, ஒரு ஜனநாயக நாட்டிலே ஏற்படுகின்றதைப் போன்ற ஓர் ஆட்சி முறையின் மூலம் இது செய்யப் பட வேண்டும். இன்றைய காலச் சூழ்நிலையை அனுசரித்து செய்யப்பட வேண்டும். அதனை நாங்கள் முற்றாகத் தவிர்க்க முடியாது.தவிர்க்கக் கூடாது. ஆகையினால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என்ற அழைப்பை விடுத்திருக்கிறது.

இந்தக் கொரோனா வைரஸ் பரவப் போகின்றது என்ற பீதியிலே இருக்கின்ற பலர் இது இப்பொழுது தேவையில்லாத விசயம் என்று சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் காலப்போக்கிலே இன்னும் ஓரிரு வாரங்களுக்குள்ளே இதனுடைய தாற்பரியம் அவர்களுக்குப் புரியும். மக்கள் இப்பொழுது பட்டினியை எதிர்நோக்குகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே பெரிதாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையினாலே இந்த இரண்டு அங்கங்களுக்கும் இடையிலான ஒரு புள்ளியை நாங்கள் பெற வேண்டுமாக இருந்தால் –

மக்கள் வெளியே நடமாட முடியாத சூழ்நிலையும், அதே வேளையிலே நடமாட வேண்டிய சூழ்நிலையும் இருக்கின்றபோது இரண்டுக்கும் இடையிலே இருக்கின்ற ஒரு நடுத்தரப் புள்ளியை நாங்கள் சரியான விதத்தில் அடையாளம் கண்டு அதைச் சரியான சட்டதிட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்துவதாக இருந்தால் நீண்ட காலத்திற்கு இது செயற்படுத்தப்பட வேண்டியதாக இருக்கும்.

அந்தக் காரணத்தினால் ஒரு நிலை கொள்ளகூடிய ஒரு முறையை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும். திடீர் என்று ஒருவர்,இருவர் செய்கின்ற தீர்மானங்களின் மூலமாக இதனை நாங்கள் செய்ய முடியாது.

ஆகையினாலே எவ்வளவுதான் பயங்கரமான சூழ்நிலையாக இருந்த போதிலும் கூட அரசாங்கம் அல்லது ஜனாதிபதி தனக்கு அரசியலமைப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை உபயோகித்து, நாடாளுமன்றத்தை நிச்சயமாக மீளவும் கூட்ட வேண்டும். அதன் மூலமாக சில சட்ட திட்டங்களை – நாங்கள் மற்றைய நாடுகளிலேது தொடர்பாக செய்திருக்கின்ற சட்டதிட்டங்களை படித்திருக்கிறோம. – அவை போன்ற சட்டங்களை உடனடியாக உருவாக்கலாம். பாராளுமன்றம் ஒரே இடத்திலே கூட வேண்டிய அவசியம் கிடையாது. அதை வேறு விதத்திலே கையாளலாம்.

ஆனால் நிச்சயமாக நிபுணர்களுடைய ஆலோசனையின் பேரிலே இது நடத்தப்பட வேண்டும். அப்படியாக ஒரு சரியான போக்கிலே சென்றால்தான் இந்த நீண்ட கால நோக்கிலே சரியான வகையிலே நாங்கள் செய்து முடிக்கலாம். வைரஸ் பரவுவதிலிருந்து நாங்கள் தப்பித்து கொள்ளலாம். – என்றார்.

# மருத்துவர்களுக்கு கவச உடை இந்தியாவில் இல்லாத அவலம்



## மழை அங்கியும் பயன்பாட்டில்

இந்தியாவில் கொரோனா தொற்று வேகமாகப் பரவத் தொடங்கியிருக்கும் நிலையில் கொல்கத்தா அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் அணிவதற்கான பாதுகாப்புக் கவச உடைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மழை அங்கியை பயன்படுத்த வேண்டிய அவலத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது மருத்துவப் பணியாளர்களுக்குத் தொற்றுப் பரவும் அபாயத்தை தீவிரமாக்கியுள்ளது.

கொல்கத்தாவில் அரசு மருத்துவ கல்லூரி வைத்தியசாலை, தொற்று நோய் வைத்தியசாலை ஆகியவற்றில் கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவமனைகளில் ஒருசில கவச உடைகளே இருப்பதால் அவற்றைக் குறிப்பிட்ட மூத்த மருத்துவர்கள் அணிந்துகொள்கிறார்கள். மற்றவர்களுக்கு மழை அங்கி வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வைராலஜி நிபுணர் அமிதா பாநாத் கூறும் போது, உலக சுகாதார நிறுவனத்தின் விதிகள்படி மருத்துவ கவச உடையை தவிர வேறு எதையும் பாதுகாப்பு சாதனமாக அணிய முடியாது. அதேநேரத்தில் மழை அங்கியால் ஓரளவுக்கு இதைத் தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மழை அங்கியின் கழுத்துப் பகுதியை மூடும் வகையில் சில மாற்றங்களை செய்து அவசர தேவைக்கு பயன்படுத்தி வருவதாகவும், இதைத்தவிர வேறு வழியில்லை என்றும் அவர் கூறினார்.

### கொரோனா அண்ட விடாமல் தடுக்க

# எல்லைச் சாமியாக மாறி ஊரைக் காக்கும் பெண்!

தெலுங்கானா மாநிலம் நல்கொண்டா மாவட்டத்தில்உள்ளதனது கிராமத்தில்கொரோனா பரவாமல் தடுப்பதற்காக இளம்பெண் ஒருவர் கிராம எல்லையில் காவல் காக்கிறார்.

மதனபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் அகிலா யாதவ்(23) என்றபட்டதாரிப்பெண்ணே இவ்வாறு காவல் காக்கிறார். இவர் கிராமத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

தங்கள் கிராமத்தில் யாருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்படக்கூடாது என்று ஊரைக் காக்கும் எல்லைச் சாமியாய் நின்று கொண்டிருக்கிறார்.

கையில் தடியுடன் ஊரின் எல்லைப் பகுதியில் நின்று கொண்டு, தேவையின்றி யாரும் உள்ளே வராமலும், வெளியே செல்லாமலும் பார்த்துக் கொள்கிறார்.

இவரது செயலுக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இதுபற்றி அகிலா கூறியதாவது:-

தொடக்கத்தில் ஊரடங்கு உத்தரவை பொது மக்கள் யாரும் தீவிரமாக கடைபிடிக்கவில்லை. சிலர்தேவையின்றி கிராமத்தில் இருந்துவெளியே செல்வதை காண முடிந்தது. எனவே நான் கிராமத்தின் எல்லையில் அமர்ந்து கொண்டேன். அங்கே தடுப்புகள் அமைத்து காவல் காக்கத் தொடங்கினேன்.

உள்ளே வருபவர்கள் மற்றும் வெளியே செல்பவர்களிடம் என்ன காரணம்? எதற்காக செல்கிறீர்கள்? என்று கேள்வி கேட்பேன். அது தேவையான ஒன்றாக இருந்தால் மட்டுமே



அனுமதி அளிப்பேன். இல்லையெனில் அப்படியே திரும்பி போக அறிவுறுத்துகிறேன்.

நம்மைக் காத்துக் கொள்ள இதுதான் சரியான சமயம். நமது சொந்தங்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படாமல் பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

எனது கிராமத்தை காக்க என்னால் முடிந்த சிறிய வியத்தை செய்கிறேன். யாராவது ஒருவருக்கு வந்து விட்டால் கூட ஒட்டுமொத்த கிராமத்தையும் பாதித்துவிடும். எங்கள் கிராமத்திற்குள் புதிய வாகனமோ அல்லது புதிய முகங்களோ வருவது தென்பட்டால் அவர்களிடம் தீவிரமாக விசாரிப்பேன்.

நகரத்தில் இருந்து வருபவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறேன். எங்கள் கிராமத்தில் ஆயிரத்து 600 பேர் இருக்கின்றனர். அவர்களுக்கு சுமார் 2 ஆயிரம் முகக் கவசங்கள் விநியோகம் செய்துள்ளோம் என்றார்.

# இணைய வழியிலான வகுப்புக்கள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பம்

## கொரோனா வைரஸை எதிர்கொள்ளப் புதிய திட்டம்

கொரோனா காரணமாக இந்தியா முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில், உத்தரப் பிரதேசத்தின் பல்கலைக்கழகங்கள் மற்றும் திறனாய்வுத் தேர்விற்கான தனியார் பயிற்சி நிலையங்களில் இணையதளம் மூலம் வகுப்புகளைத்தொடங்கியுள்ளன.

நாட்டின் அனைத்துக் கல்வி நிலையங்களும் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ள நிலையில், வீட்டில் இருந்தே பணியாற்றும்படி மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அறிவுறுத்தி இருந்தது. எனினும் அதற்குப் பிறகும் கல்வி நிறுவனங்கள் உடனடியாகத் திறக்கப்படுவது சந்தேகமாகவே உள்ளது. இதனால், தங்கள் வீடுகளில் அடைந்து கிடக்கும் மாணவர்களுக்காக உத்தரபிரதேசத்தில் ஒரு புதிய முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

இதன்படி, தலைநகரில் உள்ள லக்னோ பல்கலைக்கழகம், பாபாசாஹேப் பீமராவ் அம்பேத்கர் பல்கலைக்கழகம் ஆகியவை தமது மாணவர்களுக்கு இணையதளம்மூலமாகவகுப்புகளைத்தொடக்கியுள்ளன.

ஆரம்பக்கட்டமாக நூலக விஞ்ஞானம், சூழலியல் உயிரி வேதியியல் ஆகிய பாடப் பிரிவினருக்கு பேராசிரியர்கள் இணையத்தின் மூலம் வகுப்புகளை எடுத்து வருகின்றனர்.

மாணவர்கள் இவற்றைத் தங்கள் வீட்டில் இருந்தபடியே கணினிகளில் கவனித்துப் பயனடைகின்றனர். இதன் பயனைப் பொறுத்து மற்றவர்களுக்கும் இந்த முறை தொடங்கப்படும் எனத் தெரிவித்தார் பல்கலைக்கழகத்தின் செய்தித் தொடர்பாளரான துர்கேஷ் ஸ்ரீவாஸ்தவா.

இதேபோல் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திலும் சில பாடப்பிரிவுகளுக்கு இணையதள வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இவை முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மற்றும் 'ஜூம் க்ளவுட்' எனும் தனியார் நிறுவனங்களின் இணையதளங்கள் வாயிலாக எடுக்கப்பட்டு வருகின்றன.

இதில், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் காலம் வீணாகாதபடி குறிப்பிட்ட நேரங்களில் முன் கூட்டியே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இதே முறையை திறனாய்வு மற்றும் நுழைவுத் தேர்வுகளுக்காகப் பயிற்சி தரும் பிரபல தனியார் கல்வி நிறுவனங்களும் கடைப்பிடிக்கின்றன.

### மது அருந்த முடியாததால்

# ஐதராபாத்தில் 100 பேருக்கு மன நலம் பாதிக்கப்பட்டது

இந்தியாவில் பிறப்பிக்கப்பட்டுள்ள 21 நாள் ஊரடங்கைத் தொடர்ந்து அங்கு அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுள்ள நிலையில், மதுபானக் கடைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால் மது அருந்த முடியாத மது அடிமைகள் பலரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கானா மாநிலத் தலைநகர் ஐதராபாத்தில் மட்டும் மது குடிக்க முடியாதால் 100 பேருக்கு மனநலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்தியாவசியபொருட்களுக்குதேவையான கடைகள் மட்டுமே குறிப்பிட்ட நேரங்களில் திறக்க அனுமதிக்கப்பட்டு உள்ளது. மற்ற அனைத்துகடைகளும், வணிகநிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்து முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. மதுக்கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனால் மதுவுக்கு அடிமையானவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஏற்கனவே வீட்டில் முடங்கிக் கிடப்பதால் அவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். மது குடிக்க முடியாததால் அவர்களது மனநலம் மேலும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது

அவர்கள் அனைவரும் ஐதராபாத்தில் உள்ள ஐ.எம்.எச். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மது அருந்த முடியாததால் அவர்களது உடல்நிலையில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மன நிலை பாதிக்கப்பட்ட சிலரின் உடல்நிலை கவலையளிக்கும் வகையில் உள்ளது.

அவர்களுக்கு மன ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குடிக்க முடியாமல் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு 22 முதல் 55 வயது வரை இருக்கும். இதில் பெரும்பாலானவர்கள் நாளாந்தத் தொழிலாளர்கள் ஆவார்கள்.

# இணையத்தில் மதுபானம் வாங்க முயன்றவர் ரூ. 1.3 லட்சம் இழந்தார்

இந்தியாவில் ஊரடங்கால் கடைகள் அனைத்தும் மூடப்பட்டதால் மதுபானம் வாங்குவது பல இடங்களில் சிக்கலானதாக மாறி இருக்கின்றது. தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் சில மணி நேரம் மதுபானக் கடைகள் திறக்கப்படுகின்றன. இந்தச் சிக்கல் நிலையால் இணையத் தளம் வாயிலாக மதுபானம் வாங்க முயற்சி செய்த பெண் ஒருவர் ஒரு லட்சம் ரூபாய் இந்தியப் பணத்தை இழந்தார்.

மும்பை செம்பூரை சேர்ந்த பெண் தனது கணவருடன் சேர்ந்து இணையத்தின் மூலம் மதுபானம் வாங்க முயற்சி செய்தார்.

இணையத்தில் பணம் செலுத்தினால் மதுபானம் கிடைக்கும் என போடப்பட்டு இருந்த ஒரு கடையின் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது எதிர் முனையில் பேசியவர் வீட்டுக்கே மதுபானம் கொண்டு வந்து கொடுக்க ரூ. 3 ஆயிரம் (இந்தியப் பணம்) தரவேண்டும் என கூறினார்.

மேலும் அந்த பணத்திற்காக பெண்ணின் கடன் அட்டை விவரங்களை கேட்டார். தனது கணவரின் கடனட்டை விவரங்களைக் கூறினார் பெண். உடனடியாக அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.30 ஆயிரம் எடுக்கப்பட்டது. இதுகுறித்து பெண், தொலைபேசியில் பேசியவரிடம் விவரம் கேட்டார். அப்போது அவர், ரூ. 3 ஆயிரத்துக்கு பதிலாக தெரியாமல் ரூ. 30 ஆயிரம் எடுத்துவிட்டதாக கூறினார்.

மீதிப் பணத்தை மீண்டும் கணவரின் கடனட்டைக் கணக்குக்கு அனுப்புவதாகக் கூறினார். சிறிது நேரத்தில் கடனட்டை மூலம் ரூ.1 லட்சம் மீண்டும் எடுக்கப்பட்டதாக குறுந்தகவல் வந்தது.

அதன்பிறகு தான் நூதன முறையில் பணம் மோசடி செய்யப்பட்டதை பெண் உணர்ந்தார். இந்த சம்பவம் குறித்து அந்த பெண் தனது கணவருடன் திலக் நகர் பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டார்.

இந்தியாவில் இணையத்தளம் மூலம் மதுபானம் விற்பனை செய்ய அனுமதி கிடையாது. எனவே

# அமெரிக்காவில் மூன்றே மாதங்களில் நான்கரை கோடி பேர் வேலையிழப்பர்




வோஷிங்ரன், மார்ச் 31

கொரோனா கிருமித் தாக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் அமெரிக்காவில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் 4 கோடி 70 லட்சம் (47 மில்லியன்) அமெரிக்கர்கள் தமது வேலையை இழப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவில் வேலையற்றோரின் எண்ணிக்கை 32 சதவீதத்துக்கும் அதிகமாகும் என்று நாட்டின் மத்திய வங்கியின் ஆய்வு தெரிவிக்கின்றது.

அமெரிக்காவில் ஏற்கனவே 33 லட்சம் பேர் (3.28 மில்லியன்) கடந்த வாரமே தம்மை வேலையற்றவர்களாகப் பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மிக விரைவாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணமாக, தொகுதி வியாபார அங்காடியான மஸீஸ் தன்னுடைய விற்பனைப் பகுதியில் விற்பனையாளர்களாகப் பணியாற்றிய 1 லட்சத்து 30 ஆயிரம் பேரை சம்பளமற்ற விடுப்பில் அனுப்பியிருப்பதாக திங்கட்கிழமை தெரிவித்தது.

மே மாதம் வரைக்கும் ஊழியர்களின் மருத்துவக் காப்புறுதி மட்டுமே செலுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது.

## பாப்பரசரின் சகாவுக்கும் தொற்றியது கொரோனா



பாப்பரசரின் நெருங்கிய சகாவான ரோம் திருச்சபையின் 2 ஆம் நிலைத் தலைவரான கர்தினால் அஞ்சலோ டி டொனாடிஸ் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட்-19 கிருமித் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து ரோம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 66 வயதான டொனாடிசுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிருமித் தொற்றுக்குள்ளாகும் வரையில் அவர் சிறந்த உடல் நிலையில் இருந்தார் என்றும் அமைதியாகவும் திடமாகவும் நடமாடி வந்தார் என்றும் திங்கட்கிழமை வத்திக்கான் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாப்பரசர் பிரான்ஸிசுக்கும் கர்தினாலுக்கும் இடையில் நெருக்கமான சந்திப்புக்கள் எதுவும் அண்மையில் நிகழ்ந்தனவா என்பது தொடர்பில் தெளிவான தகவல்கள் எதுவும் இதுவரையில் இல்லை.

ரோம் திருச்சபையின் 2ஆம் நிலைத் தலைவராக 2017ஆம் ஆண்டு பாப்பரசரால் டொனாடிஸ் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

தானோ அல்லது தனக்கு நெருக்கமானவர்களோ கிருமித் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்று கடந்த சனிக்கிழமை பாரப்பரசர் தெரிவித்திருந்தார்.

## நாய், பூனை இறைச்சிக்கு சீனாவில் சலுகை விலை

### கொரோனா பாதிப்பு குறைந்ததை அடுத்து மீண்டும் சூடு பிடிக்கிறது வியாபாரம்

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு குறைந்துள்ள நிலையில் அங்குள்ள இறைச்சி சந்தைகளில் தேள், முயல், பூனைகள், நாய்கள் கூண்டுகளில் அடைக்கப்பட்டு சலுகை விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

சீனாவில் பாம்பு, பூனை, வவ்வால்களின் இறைச்சி விற்பனை அமோகமாக நடைபெறுவது வழக்கம். ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுகான் நகரில் தான் முதன் முதலில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் இத்தகைய விலங்குகள் விற்கப்படும் சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட சட்டவிரோத காட்டு மிருகங்களின் இறைச்சியில் இருந்துதான் பரவியிருக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து இவற்றின் விற்பனை முழுமையாக வீழ்ச்சியடைந்தது.



பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக சீனாவில் கொரோனா கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஹூபேய் மாகாணமும் இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளதால் வுகான் நகரில் சாலைப் போக்குவரத்து தொடங்கி உள்ளது.

இதைத்தொடர்ந்து சீனாவில் மீண்டும் இறைச்சி கடைகள் திறக்கப்பட்டுள்ளன. குயிலின் மற்றும் டாங்குவான் பகுதிகளில் உள்ள ஒரு இறைச்சி சந்தையில் நாய், பூனைகள் கூண்டுகளில் அடைக்கப்பட்டு சலுகை விலைக்கு வழங்கப்பட்டன.

பாரம்பரிய மருந்தாகக் கருதப்படும் வவ்வால், தேள், முயல் மற்றும் தோல் உரிக்கப்பட்ட வாத்துகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## ஸ்பெயின் இறுதிச் சடங்குகளில் மூவருக்கு மட்டுமே அனுமதி

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க ஸ்பெயினில் இறுதி சடங்கு நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஸ்பெயின் அரசு வெளியிட்ட அறிக்கையில், பிரார்த்தனைக் கூட்டங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது இறுதி சடங்குகளில் மூன்று பேருக்குமேல் கலந்துகொள்ளக் கூடாது. அந்த மூன்று பேரும்கூட 2 மீற்றர் இடைவெளியில் சமூக விலகலை கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த ஸ்பெயினில் ஏப்ரல் 12ஆம் திகதி வரை அவசர நிலை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 87 ஆயிரத்து 956 பேர் பாதிக்கப்பட்டனர். 7 ஆயிரத்து 716 பேர் உயிரிழந்தனர். எனினும் நாட்டில் தொற்று அதனது உச்சநிலையை எட்டி இப்போது குறையத் தொடங்கிவிட்டது என்று அயலுறவுத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் கொவிட் -19 காய்ச்சலுக்கு இத்தாலியும், ஸ்பெயினும் அதிக அளவிலான உயிர்களைக் காவு கொடுத்துள்ளன.



## கொரோனா துளிகள்

* உயிரிழந்தோர்: 37 ஆயிரத்து 832
* தொற்றுக்குள்ளானோர்: 7 லட்சத்து 87 ஆயிரம்
* குணமானோர்: ஒரு லட்சத்து 66 ஆயிரம்
* மோசமான நிலையிலுள்ளோர்: 30 ஆயிரம்
* ஆகக் கூடுதல் இறப்பு: இத்தாலி நாட்டில் 11 ஆயிரத்து 591
* ஆகக் கூடுதல் தொற்று: அமெரிக்கா நாட்டில் ஒரு லட்சத்து 64 ஆயிரம்
* இறப்பில் இரண்டாம் இடம்: ஸ்பெயின் நாடு, 7 ஆயிரத்து 716
* 50 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், அமெரிக்கா, ஸ்பெயின், சீனா, ஜேர்மனி
* 15 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், பிரான்ஸ், ஈரான், பிரிட்டன், சுவிற்சர்லண்ட்
* 10 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், பெல்ஜியம், நெதர்லண்ட், துருக்கி
* 5 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், தென்கொரியா, ஒஸ்ரியா, கனடா, போர்த்துக்கல்
* 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 6 நாடுகள், இஸ்ரேல், பிரேசில், ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், செஸ்சியா
* 2 ஆயிரத்துக்கு மேல்: 6 நாடுகள், அயர்லாண்ட், மலேசியா, டென்மார்க், சிலி, ரொமானியா, பொலன்ட்
* ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ள இரண்டாவது நாடாக இத்தாலி இணைந்துள்ளது. ஒரு லட்சத்து ஓராயிரத்து 739 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.
* கொரோனா நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சுகாதார, மருத்துவப் பணியாளர்களை உதவிக்கு வருமாறு அமெரிக்காவின் நியூயோர்க் மாநில ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.
* அமெரிக்காவில் அடுத்த இரு வாரங்களில் கொரோனா பாதிப்பு உச்சத்தைத் தொடும் என்கிற நிலை யில் அதனை எதிர்கொள்வதற்குத் தேவையான அளவு சுவாசக் கருவிகள் (வென்டிலேட்டர்ஸ்) வைத்தியசாலைக ளில் உள்ளன என்று அதிபர் ட்ரம் நம்பிக்கை தெரிவித்தார்.
* கொரோனா தொற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இஸ் ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகுவிற்கு கிருமித் தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது அலுவலக ஊழியர் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் சுய தனிமைக் குச் சென்றிருந்தார்.
* சிரியாவில் கொரோனா பாதிப்பால் முதலாவது உயிரிழப்புப் பதிவாகி இருக்கின்றது.
* கொரோனாவுக்கான மெல்லிய அறிகுறிகளை அடுத்து சுய தனிமைக்குச் சென்ற பிரிட்டிஷ் இளவரசர் தொற்று குணமாகியதைத் தொடர்ந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளார்.
* மருத்து முகக் கவசங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றை தொற்று நீக்கி மீண்டும் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதற்கான இயந்திரங்கள் பிராந்திய வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அதிபர் ட்ரம் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு முகக் கவசமும் 20 தடவைகளுக்கு தொற்றுநீக்கப்படக் கூடியவை. புதிய இயந்திரங்கள் ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் முகக் கவசங்களைத் தொற்று நீக்கக்கூடியவை.
* 5 நிமிடங்களில் கொரோனா கிருமித் தொற்றைக் கண்டுபிடிக்கக்கூடிய புதிய பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியிருப்பதாக அதிபர் ட்ரம்ப் நேற்றுத் தெரிவித்தார். ஆனால், அது பற்றிய முழுமையான விவரங்களை அவர் வெளி யிடவில்லை.
* கொரோனா கிருமியால் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள ஏயார் கனடா விமான நிறுவனம் தனது 15 ஆயிரம் பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யவுள்ளது. ஏற்கனவே 5 ஆயிரத்து 150 விமானப் பணியாளர் கள் மற்றும் 600 விமானிகளுக்கு சம்பளமற்ற விடுப்பு வழங்கியுள்ளது அந்த நிறுவனம்.
* ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மார்க்கல் தொடர்ந்தும் சுய தனிமையிலேயே இருக்கிறார். அவரது மருத்துவருக்கு கொவிட் – 19 கிருமித் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து மார்ச் 22ஆம் திகதி முதல் அவர் சுய தனிமையில் இருக்கிறார். இந்தக் காலப் பகுதியில் அவருக்கு மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று ஏதும் கண்டறியப்படவில்லை என்று அரச தரப்பு பேச்சாளர் தெரிவித்தார்.
* பிரான்ஸில் நேற்று 418 பேர் உயிரிழந்தனர். எந்தவொரு 24 மணி நேரத்திலும் ஆகக் கூடுதலான உயிரிழப்பு எண்ணிக்கை இது.
* கொரோனா அச்சத்தால் சீனாவில் இருந்து மீன்களின் இறக்குமதி தடைப்பட்டதை அடுத்து கென்யாவில் உடன் மீன் விற்பனை அதிகரித்திருக்கிறது. விக்டோரியா கடல் ஏரியின் கரையில் உடன் பிடித்த மீன் விற்பனை 40 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

# கொரோனோவும் கொலைகாரர்களும்

## நீதியற்ற தேசத்தில் நாதியவற்றவர்களின் நிலை!

- முருகபூபதி -

(நேற்றைய தொடர்ச்சி)

படுகொலை, பாலியல் கொலை, போதை வஸ்த்து கடத்தல், தொடர்பான பயங்கர குற்றங்கள் புரிந்த கைதிகளும், அரசியல் கைதிகளும் நீண்டகாலமாக சிறையில் இருக்கின்றனர்.

இவர்களில் இனவிடுதலைப்போர் தொடர்பிலான அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி முன்னைய மைத்திரி – ரணில் நல்லாட்சி (?) காலத்திலும் தொடர்ச்சியாக பேசப்பட்டது.

அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கினால் நன்மையா...? தீமையா...? – என்று அன்றைய ஜனாதிபதி மைத்திரியும் அன்றைய பிரதமர் ரணிலும் சிறைச்சாலைகள் சீரமைப்பின் அன்றைய அமைச்சர் சுவாமிநாதனும் சிறிதுகாலம் பட்டிமன்றம் நடத்தினார்கள்!

அந்த பட்டிமன்றச் செய்திகளையும் நாம் ஊடகங்களில் பார்த்தோம்.



நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில், நல்லவரின் தயக்கமும் தாமதமுமே தீமையாய் முடிகிறது என்று தமது ஹெம்லெட் நாடகத்தில் ஒரு செய்தியாகச் சொன்னவர் உலக நாடகமேதை வில்லியம் சேக்ஷ்பியர். அவ்வாறுதான் அன்றைய நல்லாட்சியிலும் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒரு நாடகத்திற்கு ஒப்பானதாக மாறியிருந்தது.

வெளியே இருப்பவர்கள் அனைவரும் நல்லவர்கள் அல்லர். சிறையினுள்ளே இருப்பவர்கள் அனைவரும் கெட்டவர்கள் அல்லர் என்று சிறிதுகாலம் சிறைவாசம் அனுபவித்த நடிகவேள் எம்.ஆர். ராதாவும், அதிகார வர்க்கமும் அரசியல்வாதிகளும் துரத்தி துரத்தி வேட்டையாட முனைந்தபோதிலும், மனம் தளராமல் துணிந்து நின்று இந்தியா திகார் சிறைக்கைதிகளை இரட்சித்த தேவதையாக திகழ்ந்த கிரண்பேடியும் வேறு வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள்!

> நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில், நல்லவரின் தயக்கமும் தாமதமுமே தீமையாய் முடிகிறது என்று தமது ஹெம்லெட் நாடகத்தில் ஒரு செய்தியாகச் சொன்னவர் உலக நாடகமேதை வில்லியம் சேக்ஷ்பியர். அவ்வாறு தான் அன்றைய நல்லாட்சியிலும் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒரு நாடகத்திற்கு ஒப்பானதாக மாறியிருந்தது.

இன்று இலங்கைச் சிறைகளில் ஏற்கனவே வாடிய நிலையில் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் அடைபட்டுள்ள அரசியல் கைதிகளின் வாழ்வும், நன்மைக்கும் தீமைக்கும்இடையிலான போராட்டத்தில் இரண்டறக் கலந்துவிட்டது. இந்த அரசியல் கைதிகளில் எத்தனைபேர் நேரடியாக பயங்கரவாதச்செயல்களில் ஈடுபட்டவர்கள், எத்தனைபேர் சந்தேகத்தின்பேரில் கைதாகி சித்திரவதைகளின் மூலம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டவர்கள், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தெரியாத்தனமாக உணவும் உறையுளும் வழங்கியவர்கள், எத்தனை பேரிடம் சந்தேகத்திற்கிடமான தகவல்கள் இருந்தன என்பது பற்றியும் அவரவர் மனச்சாட்சிக்குத்தான் தெரியும்.

'சட்டம் ஒரு இருட்டறை. அங்கு நீதிதான் ஒரு வெளிச்சவிளக்கு' என்பார்கள்.

இந்தப்பின்னணியுடன் முன்னர் சிறையிலிருந்த சில முக்கிய அரசியல்வாதிகள் பற்றியும் கொலைக் குற்றச்சம்பவங்களுக்கு துணைசென்று சாதுரியமாக தப்பியவர்களையும் – வன்முறைகளில் ஈடுபட்டு பின்னாளில் அமைச்சர்களாகி போதி பூசைகளில் கலந்துகொண்ட புனிதர்களையும் எண்ணிப் பார்க்கத்தோன்றியது.

இன்று இரண்டாக,மூன்றாக பிளவுபட்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியை ஸ்தாபித்த தலைவர்கள் ரோகண விஜேவீரா, லயனல் போப்பகே, உபதிஸ்ஸ கமநாயக்க, பொடி அத்துல, லொக்கு அத்துல, மஹிந்த விஜேசேகர, டி.ஐ.ஜீ. தர்மசேகர உட்பட பலர் அரசியல் கைதிகளாக வெலிக்கடை, மகஸின், கண்டி போகம்பர, யாழ்ப்பாணம், அநுரத புரம் சிறைகளில் அடைபட்டிருந்தவர்கள்தான்.

விடுதலையானதும் மீண்டும் அரசியலில் ஈடுபட்டு தம்மை ஜனநாயக நீரோட்டத்தில் ஈடுபடுத்தினர்.

ரோகண விஜேவீரா, முதலாவது ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு, சமசமாஜக்கட்சியின் வேட்பாளர் கொல்வின். ஆர். டி. சில்வாவை விடக் கூடுதல் வாக்குகள் பெற்றார்.

அதன்பின்னர் நடந்த மாவட்டசபைத் தேர்தலில் காலிமாவட்டத்தில் போட்டியிட்டு, காலியில் தெரிவானவர் மக்கள் விடுதலைமுன்னணியின் (முன்னாள்) பொதுச் செயலாளர் லயனல் போப்பகே. இவர் காலியில் நடந்த இடைத் தேர்லிலும் போட்டியிட்டவர். ஆனைமடுவ இடைத்தேர்தலில் உபதிஸ்ஸ கமநாயக்க போட்டியிட்டார்.

பின்னாளில் மஹிந்த விஜேசேகர சந்திரிகாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் பதவி வகித்தார்.



இந்தச் சம்பவங்களுக்கு முன்னோடியாக பிரிட்டிாரின் ஆட்சிக்காலத்தில் கலாநிதிகள் என்.எம்.பெரேரா, கொல்வின். ஆர். டி. சில்வா முதலானோரும் அரசியல்கைதிகளாக சிறை வைக்கப்பட்டு இந்தியாவுக்கு தப்பி ஓடி தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்கள்தான். பின்னாளில் எம்.பி.க்களாகவும் அமைச்சர்களாகவும் பதவி வகித்தவர்கள்.



தோழர் சண்முகதாசன், ஸ்ரீமாவின் ஆட்சிக்காலத்தில் 1971 ஏப்ரில் கிளர்ச்சி சந்தேக நபராக சிறையில் இருந்தவர்தான்.

1959 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி ஒரு சதிமுயற்சியால் சுடப்பட்டு, மறுநாள் 26 ஆம் திகதி உயிரிழந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவின் கொலைச் சந்தேகநபர்களில் ஒருவரான (முன்னாள்) சமூகநலத்துறை அமைச்சர் திருமதி விமலா விஜயவர்தனா, பின்னர் சட்டத்தின் ஓட்டைகளினால் சாதுரியமாகத் தப்பி வெளிநாடு சென்று அஞ்சாதவாசம் தொடர்ந்தார்.

அரசியல் காரணங்களினாலும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலும் முன்னர் சிறையில் இருந்தவர்கள்தான் தற்போதைய தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா, பின்னாளில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் வடக்கு – கிழக்கு முதல்வர் வரதராஜப்பெருமாள் ஆகியோர்.

1983 இல் வெலிக்கடையில் சிறையிலிருந்தபோது ஆவணி அமளியில் உயிர்தப்பிய டக்ளஸ் தேவானந்தாவும் வரதராஜப்பெருமாளும் பின்னர் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிறையுடைப்பு நடந்ததும் இந்தியாவுக்கு தப்பி ஓடியவர்கள் தான்.

இவர்கள் மீண்டும் வந்து இலங்கை அரசியல் அரங்கில் தோன்றினார்கள்.

புலிகள் இயக்கத்திலிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் ( பிள்ளையான் ) பின்னாளில் கிழக்கு மாகாண முதல்வரானார். தற்போது அவர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கு தொடர்பாக மட்டக்களப்பு சிறையிலிருக்கிறார்.

புதிய ஜனாதிபதி 2019 இல் பதவிக்கு வந்ததும் அவர் விடுதலையாகிவிடுவார் என்ற ஊகங்களும் வெளிப்பட்டன. அவரும் அடுத்த தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண தளபதி கருணா அம்மான், மஹிந்தரின் அரசில் நியமன அங்கத்தவராகி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் துணைத்தலைவராகவும் விளங்கினார். அடுத்த பொதுத்தேர்தலிலும் அவரும் போட்டியிடுகிறார்.

லலித் அத்துலத் முதலி என்பவர் தமது முன்னாள் மனைவிக்கு அசிட்வீசிய குற்றச்சாட்டில் சிறைவைக்கப்பட்ட ஒரு ஐக்கிய தேசியக்கட்சி பிரமுகர்.

ஆனால், இவரும் சாதுரியமாக வெளியே வந்து 1977 இல் நடந்த பொதுத்தேர்தலில் இரத்மலானை தொகுதியில் போட்டியிட்டு வென்று, ஜே.ஆரின் அமைச்சரவையில் முதலில் வர்த்தக அமைச்சராகவும் பின்னர் பிரதிபாதுகாப்பு அமைச்சராகவும் பதவிவகித்தவர்.

(07 ஆம் பக்கம் பார்க்க)

# கொரோனோவும் கொலைகாரர்களும்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லலித் அத்துலத் முதலி தமது முன்னாள் மனைவிக்கு அசிட் வீசி தாக்கியதனால், அன்று தேர்தல் மேடைகளில் எதிரணியினர் அவரை அசிட் முதலி என்றும் கேலிசெய்தனர்.

ஆனால், அவர் அமைச்சரானதும் விஹாரைகளில் அரசமரங்களுக்கு போதிபூசை செய்து பாவங்களை கழுவிக்கொண்டார்.

பின்னாளில் இவர் பிரேமதாஸவுடன் முரண்பட்டார். இருவரும் ஒரு வார காலத்தில் வேறு வேறு இடங்களில் கொல்லப்பட்டனர். பண்டாரநாயக்கா கொலைச் சந்தேக நபர்கள் இருவருக்குத் தண் டனை கிடைத்தது. ஆனால், லலித் – பிரேமதாஸ கொலைக் குற்ற வாளிகள் பிடிபடவேயில்லை.

வடக்கில் 1987 இல் வடமராட்சியில் லிபரேன் ஒப்பரேனுக்கு உத்தரவிட்டு பல இன்னுயிர்கள் பலியாவதற்கு காரணமாக இருந்த லலித் அத்துலத் முதலியும் தென்னிலங்கையில் இன்றும் மர்மமாக இருக்கும் ஒரு அரசியல் ஒப்பரேனில் பரலோகம் சென்றார்.

2009 இறுதியுத்தத்தின் பின்னர் அதனை வெற்றிவிழாவாக கொண்டாடிய மகிந்தரும் அவருடைய தம்பி கோட்டபாய ராஜ பக்ஷவும் இராணுவத்தளபதி சரத் பொன்சேக்காவும் கேக்வெட்டியும் பாற்சோறு உண்டும் மகிழ்ந்தார்கள். பின்னர் தோன்றிய முறுக ளினால் வெள்ளைக்கொடி விவகாரத்தில் சரத்பொன் சேக்கா சிறைவைக்கப்பட்டார்.

விடுதலையாகியதும் மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி நன்றிக்கடனாக சரத்பொன்சேக்காவுக்கு ஃபீல்ட் மார்ல் பதவி உயர்வும் வழங்கியமையுடன் அனைத்து வேதனக் கொடுப்பனவுளையும் (இலட்சக்கணக்கில்) வழங்கியது. மக்களின் தேவைக்களுக்கு முன்னர், முன்னாள் சிறைக்கைதி சரத்பொன்சேக்காவுக்குத்தான் நல்லாட்சி நல்லது செய்தது!

சந்திரிக்கா விஜயகுமாரணதுங்க மீதான புலிகளின் தற்கொலைத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு, அரசியல் கைதியாக தொடர்ந்து சிறைவைக்கப்பட்டிருந்த ரகுபதி சர்மாவின் மனைவி திருமதி வசந்தி ரகுபதி சர்மாவும் சுமார் 15 வருட காலம் சிறைவைக்கப்பட்டு குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார். எனினும் கணவர் ரகுபதி சர்மாவுக்கு நீதிமன்றம் சுமார் 30 வருட காலத்திற்கு ஆயுள் தண்டனை விதித்து தண்டனை அனுபவித்துவருகிறார்.

கோயிலில் பூசை செய்துகொண்டிருந்த இந்த சர்மா எவ்வாறு கைதானார்..? என்பது பற்றி சட்டத்தரணிகளின் கூடாரங்களாக விளங்கும் சுமந்திரனின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு – மற்றும் தமிழ்த்தேசியத்தை தீவிரமாக முன்னெடுப்பதாக கூறிக்கொள்ளும் கஜேந்திரகுமார், சி.வி. விக்னேஸ்வரன், ரீகாந்தா முதலானோரின் கட்சிகள் என்பன ஆராய்ந்து பார்த்தனவா...?

சிறிது காலம் சிறையிலிருந்த சரத்பொன்சேக்காவுக்கு ஃபீல்ட் மார்ல் தகுதியும் வழங்கி, வேதனப்பாக்கியும் தந்த முன்னைய நல்லாட்சி அரசு, சுமார் 15 வருடகாலம் அநாவசியமாக சிறைவைக்கப்பட்ட திருமதி வசந்தி ரகுபதிசர்மா குற்றமற்றவர் என்று விடுதலை செய்திருந்தால், அவர் சிறைவைக்கப்பட்டதற்கான நட்ட ஈடு வழங்கப்பட்டதா..?

சிறையிலிருந்து வெளியே வந்தவருக்கு ஃபீல்ட் மார்ல் பதவியுயர்வு. இலட்சக்கணக்கான ரூபாய் வேதனம். ஆனால், அரசியலே தெரியாமல் – தனது குழந்தைகளையும் குடும்பத்தையும் பராமரித்து, கணவரின் கோயில் திருப்பணியிலும் ஈடுபட்டு வந்திருந்த நிலையில் சந்தர்ப்பவசமாக சிறைக்கூண்டில் அடைபட்ட அந்தக் குடும்பத்தலைவிக்கு 15 வருடங்களின் பின்னர் கிடைத்த நீதி என்ன...?

அரசியல் கைதியாக இருக்கும் சுதாகரன் என்பவரது மனைவி கிளிநொச்சியில் இறந்த சமயத்தில் சிறைக்காவலர்களினால் அந்த இறுதிச்சடங்கிற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

அவரது ஒரு பெண்குழந்தை, தனது தந்தை திரும்பிச்செல்லவிருந்த சிறை வாகனத்தில் ஏதும் அறியாமல், ஏறிச்செல்ல முயன்ற நெஞ்சை உருக்கும் காட்சியை ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள்! கைதியுடன் வந்த ஒரு சிங்களப் பொலிஸ்காரர் அந்த இறுதி நிகழ்வில் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றார்!!

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித்தேர்தலின் போது, கோட்டாப்ய ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டச்சென்ற அவரது அண்ணன் மகன் நாமல் ராஜபக்ஷ, மற்றும் அங்கஜன் முதலான அரசியல்வாதிகளும் கிளிநொச்சியில் வாழும் அந்த அரசியல் கைதியின் இல்லம் சென்று உறவினர்களுடன் பேசினார்கள்!

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதிப் பதவிக்கு வந்தால் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலையாவார்கள் என்ற ஊகமும் எம்மவரிடத்தில் அப்பொழுது எழுந்தது!

ஆனால், பொதுமன்னிப்பில் விடுதலையாகியிருப்பது, ஒரு மரணதண்டனை குற்றவாளி!?

இன்றைய ஜனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்ட (தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்குட்பட்ட) இந்த பொது மன்னிப்புக்காக இன்னமும் எத்தனைபேர் சிறையினுள்ளே காத்திருக்கிறார்கள்? ஜனாதிபதிக்கே வெளிச்சம்!

இலங்கை மக்கள் இனிவரும் காலத்தில் இந்தக் கொரோனோவையும் மறக்கமாட்டார்கள். கொலை பாதகம் செய்தவருக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பையும் மறக்கமாட்டார்கள்.

2000 ஆம் ஆண்டில் தமது உறவுகளை பறிகொடுத்த அந்த மிருசுவில் மக்களும் , இன்று நீதியில்லா ஊரில் நாதியவற்றவர்கள் நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள்!

தற்போது நாதியற்றவர்களும் வெளியில், நீதியை மறுத்தவர்களும் வெளியில்!

முற்றும்

# ஆபத்து எமைநோக்கி ஆலவட்டம் விரிக்கிறதே !

மதுகுடித்தல் புகைபிடித்தல் இப்போது அவசியமா
மனம்முழுக்க கொரனோவை எண்ணியெண்ணி துடிக்கின்றோம்
மதுகுடித்தால் கொரனோவை எதிர்த்திடலாம் எனுமெண்ணம்
மரணவாசல் கூட்டிச்செல்ல வழியாகும் எனவுணர்வோம் !

அரிசியை வாங்கிடுவோம் பருப்பையும் வாங்கிடுவோம்
அவசியமாய் தேவைப்படும் அனைத்தையுமே வாங்கிடுவோம்
அபின்கஞ்சா இப்போது அவசியமா அறிவிலிகாள்
ஆபத்து எமைநோக்கி ஆலவட்டம் விரிக்கிறதே !

அவசரமாய் செய்திகளை அனுப்புகின்ற வேளைதனில்
அலட்சியமாய் செய்திகளை அனுப்பிவைத்தல் அவசியமா
அரக்கனென கொரனோவோ அழிக்கவரும் வேளையிலே
அசிங்கமாய் கருத்துப்பட அனுப்பிநிற்றல் அவசியமா. !

கேலிகிண்டல் செய்கின்றார் கிறுக்குத்தனம் உகந்ததல்ல
கிலிபிடித்து மக்களெலாம் கொரனோவால் மருளுகிறார்
ஆறுதலாய் தேறுதலாய் அவதிநிலை தனையுணர்ந்து
அறிவுடனே செயற்படலே ஆத்மார்த்த கடமையன்றோ !

மதவாதம் இனவாதம் பேசுவதை விடவேண்டும்
மனிதமனம் எல்லாமே புனிதவுணர் வெழவேண்டும்
துன்பமுறும் யாவரதும் துயர்துடைக்க நினைப்பதுவே
நன்மைதரும் எனவெண்ணி நாம்செயலாய் ஆற்றிடுவோம் !

கொரனோவை அரசியலாய் ஆக்கிவிடல் முறையல்ல
அறநெறியை அகமிருத்தி அரசுசெயற் படவேண்டும்
நாட்டுமக்கள் நலன்பெறலே நல்லரசின் இலட்சணமாம்
வாட்டிநிற்கும் கொரனோவை வாய்ப்பாக்கல் அவசியமா !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண், அவுஸ்திரேலியா

## வவுனியா இராணுவ முகாம்களில்

# தனிமைப்படுத்தப்பட்ட 310 பேர் இன்று வீடுகளுக்குத் திரும்பினர்

வவுனியா இராணுவ முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பிறிதொரு தொகுதி விமானப் பயணிகள் இன்று விடுவிக்கப்பட்டனர்.

கொரோனோ வைரஸ் தாக்கம் நாட்டில் இனம் காணப்பட்ட நிலையில் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பயணிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவார்கள் என்று அரசு அறிவித்திருந்தது. அந்த வகையில் வவுனியா மாவமட்டத்தில் பம்பைமடு இராணுவ முகாம் மற்றும் வேலங்குளம் விமானப்படைதளம், பெரியகட்டு இராணுவ முகாம் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக கனடா, லண்டன், இத்தாலி, தென் கொரியா, ஈரான் நாட்டவர்கள் இந்த முகாமிற்கு கொண்டு வரப்பட்டு, 14 நாள்கள் தனிமைப்படுத்தி வைக்கபட்டு, கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் இந்த முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 167 பேர் கடந்த 28 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட நிலையில் 310 பயணிகள் இன்று விடுவிக்கப்பட்டனர்.

வேலங்குளம் விமானப் படைதளத்தில் 206 பேரும், பெரியகட்டு முகாமில் இருந்து 104 பேருமே இதன் போது விடுவிக்கப்பட்டனர். அவர்களிற்கு நோய்த் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் தமது வதிவிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு நோய்த் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் அவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. இலங்கையின் காலி,மாத்தறை ,கொழும்பு, கண்டி, அளுத்கம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையின மக்களும் வடக்கின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்த 28 தமிழர்களும் இதன்போது விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு சென்று திரும்பியவர்கள் தாமாகப் பதிய நாளை வரைக் கெடு

வெளிநாடுகளில் இருந்து கடந்த மார்ச் 16 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டிற்குள் வந்தவர்கள் தங்கள் விவரங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய மற்றொரு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில்வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ்வாறு பதிவு செய்வதற்கான கால எல்லை நாளை ஏப்ரல் 1 ஆம் திகதி நண்பகல் வரை மட்டுமே என்றும், அவர்கள் தங்களை பொலிஸில் பதிவு செய்யத் தவறினால், அவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

மார்ச் 16 ஆம் திகதிக்கு முதல் நாட்டுக்குள் வந்தவர்களின் பட்டியல் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர்களால் பெறுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏப்ரல் முதலாம் திகதி மதியம் 12.00 மணிக்குப் பின்னர், பொலிஸார் சந்தேக நபர்களை பதிவேட்டின்படித் தேடி அவர்களைக் கைது செய்து தனிமைப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதற்காக அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன சுட்டிக்காட்டினார்.

# பட்டினிக் கொடுமையை எதிர்த்துப் போராடுவதற்கு ஆலயங்களும் அமைப்புகளும் முன்நிற்க வேண்டும்!



## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

கொழும்பு,மார்ச்.31

நாட்டில் அமுல்படுத்தபட்டுள்ள ஊரடங்கால் பட்டினியை எதிர்நோக்கி இருக்கும் குடும்பங்களுக்கு ஆதரவாக ஆலயங்களும் ஏனைய பொது அமைப்புகளும் செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்

இவ்விடயம் தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளாவிய ரீதியிலும், இலங்கையிலும் அதிகரித்துச் செல்வதால் ஊரடங்கு தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்பே அதிகமாக உள்ளது. பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள், அங்கவீனர்கள், தினசரி வருமானத்துக்காக வேலைக்கு செல்பவர்கள் அனைவரும் சொல்லொணா வறுமைத் துன்பத்தில் அகப்பட்டு தவிக்கின்றனர். இது மிக மோசமான கட்டத்தை அடைந்து பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலை ஏற்படப் போகிறது என்பது கண்கூடாகத் தெரிகின்றது.

இந்நிலையில் இதுவரை உதவி வந்த பொது அமைப்புகள், தனவந்தர்கள் போன்றோரும் தமது உதவிகளை தொடரமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் ஆலயங்களும், கமநல கேந்திர நிலையங்களுக்குட்பட்ட கமக்கார அமைப்புகளும் தங்கள் அமைப்புக்களில் இருக்கு ஒரு பகுதி நிதியை அல்லலுறும் மக்களின் நிவாரணத்திற்காக உதவுவதற்கு வழங்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.- என்று உள்ளது.

# தொற்றாளரை அடையாளம் காணும் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## மருத்துவத்துறையினர் கோரிக்கை

கொழும்பு,மார்ச்31

அடுத்து வரும் வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமே ஊரடங்கு சட்டத்தின் கீழ் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவதுறையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்காகப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் ஆய்வுகூடங்களை பயன்படுத்த முடியும் என்று சிரேஷ்ட மருத்துவர்கள் மற்றும் கல்வியாளர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொடர்பான பரிசோதனைகள் அதிகரிக்கப்படவேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் குடும்ப மருத்துவ திணைக்களத்தின் தலைவர் வைத்திய கலாநிதிருஸ்விஹனீபாகருத்துரைத்துள்ளார்.

இதன் மூலமே புதிய தொற்றாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஊரடங்கை மீறுபவர்கள் பொலிஸாரின் தடுப்பில்

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு


கொழும்பு, ஏப். 01

அனுமதி பெற்ற சேவை அடையாள அட்டைகள் அல்லது ஊரடங்கு அனுமதிப் பத்திரமின்றி நடமாடும் அனைவரும் பிடியாணை இன்றி கைது செய்யப்படுவர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்படுவோர் கொரானா கிருமி பரம்பல் உக்கிரம் குறைவடையும் வரையில் பொலிஸ் தடுப்பில் வைக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு நடைமுறைகளைப் பொலிஸாரும் முப்படையினரும் கடுமையாக நடைமுறைப்படுத்துவர் என்று அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஜப்பான் மருந்து வந்து சேர்ந்தது



கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஜப்பானில் தயாரிக்கப்பட்ட அவிகன் என்ற மருந்தானது தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இது கொரோனா வைரஸுக்கான முழுமையான மருந்தாக இல்லாதபோதும் பதிலாக பயன்படுத்தக்கூடியது என்று வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இந்த வில்லை உலகளாவிய ரீதியில் எபோல வைரஸ் பரவலின் போது பயன்படுத்தப்பட்டது.

புாணூறாபுஹி' கொரோனா வைரஸுக்கு தகுந்த மருந்து என்பது நிரூபிக்கப்பட்டால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அதிகளவில் அதனை கொள்வனவு செய்யும் என்றும் கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இன்றைய காலைக்கதிர் நாளிதழில் 'ஆலய வழிபாடு' எனும் தலைப்பில் இடம்பெற்ற சித்திரம் - படம் 1 இல் பாடசாலையின் பெயர் தவறாகப் பிரசுரிக்கப்பட்டமையால் அப் பாடசாலையின் பெயரும் அச் சித்திரமும் மீளப் பிரசுரமாகின்றன.

படம் 1

ஜங்கரன் ஆரணி – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

## இயற்கை அன்னை




### தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**நாளைய (31/03/2020) தலைப்பு**
**இயற்கை அன்னை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# மரண தண்டனைக் குற்றவாளிக்குப் பொது மன்னிப்பா?

## 22 சிவில், சமூக அமைப்புகள் சீற்றத்துடன் கண்டனம்



மிருசுவில் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சிப்பாயான சார்ஜெண்ட் ஆர்.எம். சுனில் ரத்நாயக்கவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மார்ச் 26, 2020 அன்று பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமையை நாம் மிகவும் வன்மையாக கணடிக்கின்றோம்.

– இப்படி 22 சிவில், சமூக அமைப்புகள் ஒன்று சேர்ந்து விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றன. அந்த அறிக்கையில் அவை தெரிவித்திருப்பவை வருமாறு:–

நாடு முழுவதும் COVID - 19 வைரஸ் நோய் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், நாட்டின் சட்டவாட்சியை அவமதித்து, கொடூரமான போர் குற்றங்களை இழைத்த இராணுவ குற்றவாளிகள் நாட்டின் உச்சநீதி மன்றத் தீர்ப்புகளிலிருந்து அதி உயர்மட்டத்தில் பாதுகாக்கப்படுவார்கள் என்பதை ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தினை தனக்குச் சாதகமாக பயன்படுத்தி, இச் செயலின் மூலம் காட்டியுள்ளார். ரத்நாயக்கவிற்கு மன்னிப்பு வழங்குவதன் மூலம், இந்நாட்டின் ஜனாதிபதி, ஒரு சிறுபிள்ளையையும் ஏழு பொதுமக்களையும் படுகொலை செய்த கொடூரமான கொலையாளிக்கு தனது ஆசிகளை வழங்கியுள்ளார்.

மிருசுவில் படுகொலையானது இருபது வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஓர் கொடூரமான சம்பவமாகும். டிசம்பர் 17, 2000 அன்று மூன்று இளைஞர்கள் மற்றும் ஐந்து வயது சிறுவன் உட்பட ஒன்பது நபர்கள் உடுப்பிட்டியிலிருந்து மிருசுவிலுக்கு பயணத்தை மேற்கொண்டனர். மிருசுவில் கிராமமானது இலங்கை வட மாகாணத்தின் யாழ்ப்பாண நகரத்திலிருந்து 16 மைல் தொலைவில் உள்ளது. யுத்தம் காரணமாக, மிருசுவிலிலிருந்து இடம் பெயர்ந்து உடுப்பிட்டியில் முகாமொன்றில் குடியமர்த்தப்பட்டவர்களில் இவர்களும் உள்ளடங்குவார்கள். இடம் பெயர்ந்த குடும்பங்கள் இராணுவத்திடமிருந்து அனுமதிப் பத்திரத்தை பெற்று, மிருசுவிலில் உள்ள அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பார்வையிடடு வருவது வழக்கமாகவிருந்தது. ஆனால் அன்று அவ்வாறு சென்றவர்கள் முகாமிற்கு மீளத்திரும்பவில்லை. பின்னர் முகாமிற்கு திரும்பாத ஒன்பது நபர்களில், எட்டு நபர்கள் இலங்கை இராணுவத்தால் கொலை செய்யபட்டமை வெளிச்சத்திற்கு வந்தது.

டிசம்பர் 24, 2000 அன்று தப்பிப்பிழைத்து மறைவிலிருந்த நபர், நடந்த சம்பவத்தை விவரித்து ஏனைய எடடு நபர்களும் இருக்கும் இடம் தொடர்பிலான விவரங்களையும் குறிப்பிட்டார். பொலீஸாரும் நீதிவானும் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தேடிய பொழுது ஒரு கழிவறை கழிவு கிடங்கில் காணப்பட்ட விலங்கின் எழும்புக்கூட்டினை தவிர அங்கு சடலங்கள் எதுவும் காணப்படவில்லை. அதன் பின்னர் இராணுவ பொலீஸார் அந்நேரத்தில் அங்கு கடைமையாற்றிய அலுவலகர்கள் அனைவரையும் கைது செய்து விசாரித்த போது சார்ஜெண்ட் ஆர்.எம். சுனில் ரத்நாயக்க கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சடலங்கள் யாவும் குறித்த கழிவறை கிடங்கிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுவேறு இடத்தில்புதைக்கப்பட்டமைதெரியவந்தது.

இதைத் தெடர்ந்து பொலீஸாரும் நீதவானும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்குமிடத்திற்கு சென்று சடலங்களை வெளியில் எடுத்தனர். நான்கு நபர்கள் மற்றும் நான்கு பிள்ளைகளதும் சடலங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கழுத்து அறுக்கப்பட்டு காணப்பட்டன. மேலும் சில சடலங்களில் அவர்களது கைகளும் கால்களும் துண்டிக்கப்பட்டு காணப்பட்டது. கொலை செய்யப்படட்வர்கள் நான்கு குடும்பங்களின் அங்கத்தவர்களாவர். ஒரு குடும்பம் ஐந்து வயது மற்றும் பதின்மூன்று வயது சிறுவர்களுட்பட நான்கு அங்கத்தவர்களை இழந்து தவித்தது. மற்றுமொரு குடும்பம் தங்களுக்கு வருமானத்தைப் பெற்றுத் தந்த குடும்ப அங்கத்தவர்களை இழந்துள்ளது. மேலும் இரு குடும்பங்கள் அவர்களது பிரதான குடும்ப அங்கத்தவர்களை இழந்தது.

இக்குடும்பங்களுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க ஒரு தசாப்த காலத்திற்கும் மேலான பொழுதிலும் கூட, பல சாவால்களுக்கு மத்தியில் இறுதியாக தீர்ப்பு வழங்கப்பட்டது. ஜூன் 24, 2015 அன்று முன்னைய இராணுவ சிப்பாய் சார்ஜெனட் ஆர்.எம். சுனில் ரத்நாயக்க மிருசுவிலில் எட்டு பொதுமக்களை படுகொலை செய்தமைக்கான கொழும்பில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாய நீதிமன்றத்தில் நடைப்பெற்ற வழங்கில் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பிற்கெதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்ட பொழுதிலும், ஐந்து நீதிபதிகள் கொண்ட குழாம் இலங்கையின் உயர் நீதிமன்றில் குறிப்பிட்ட தீர்ப்பாய நீதிமன்றத்தீர்ப்பினை ஏகமனதாக ஏப்ரல் 25, 2019 அன்று மீண்டும் உறுதிப்படுத்தியது.

> நாடு முழுவதும் COVID– 19 வைரஸ் நோய் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், நாட்டின் சட்டவாட்சியை அவமதித்து, கொடூரமான போர் குற்றங்களை இழைத்த இராணுவ குற்றவாளிகள் நாட்டின் உச்சநீதி மன்றத் தீர்ப்புகளிலிருந்து அதி உயர்மட்டத்தில் பாதுகாக்கப்படுவார்கள் என்பதை ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தினை தனக்குச் சாதகமாக பயன்படுத்தி, இச் செயலின் மூலம் காட்டியுள்ளார்.

ஆர்.எம். சுனில் ரத்நாயக்கவிற்கு பொதுமன்னிப்பு வழங்கியதன் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரமானது துஷ்பிரயோகம் செய்யப்பட்டு நீதியானது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

கொடூரமான குற்றங்களை இழைத்த இராணுவத்தினர் பொறுப்புக்கூறுவது என்பது மிகவும் அரிதாகவே காணப்படும் ஒரு நாட்டில், இனங்களுக்கிடையிலான நம்பகமற்ற தன்மை ஒரு போருக்குள் நாட்டைத் தள்ள வழிவகுத்தது. இவ்வாறான நிலையில் ஓர் நாட்டின் உச்ச நீதிமன்றத்தினால் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கப்பட்டு பொறுப்புக்கூறலுக்கு உள்ளக்கப்பட்ட அரிதான சிலரில் ஒருவருக்கே பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர் வழங்கிய பொது மன்னிப்பானது நீதித்துறையின் சுதந்திரத்திற்கு ஒரு சவாலாக அமைவதோடு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடையே இலங்கையின் நீதிதுறையின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினை மேலும் குறைத்து அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.

ஏற்கனவே வறுமையினாலும் சொல்லொணா இழப்புக்களாலும் நேரடியாக பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களுக்கும் வழக்கின் தீர்ப்பின் மூலம் கிடைத்த மிகச்சிறிய ஆறுதலும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இச் சம்பவத்தின் ஒரே சாட்சியை அரச புலனாய்வு அதிகாரிகள் சென்று விசாரித்தமை குறித்து அச்சாட்சி மிகவும் அச்சம் கொண்டு, குற்றவாளி விடுதலை செய்யப்படும் பட்சத்தில் தனக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பதையும் வலியுறுத்தினார். தற்பொழுது அவருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலை உண்மையாகவே காணப்படுகின்ற பொழுதிலும் நமது சட்டங்களும் கட்டமைப்புகளும் அவருக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்படவில்லை.

பல வருடங்கள் கடந்தும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு அல்லது நட்டஈடு நிவாரணத்தை வழங்க அரசு அல்லது அரசாங்க அதிகாரிகளோ வழங்க முன்வராத காரணத்தினால் இவர்கள் வாழ்நாள் முழுவதும் தங்களுடைய குடும்பத்துக்கு வருமானத்தை பெற்றுத் தந்த உறவுகளை இழந்து மேலும் வறுமையில் வாடுவதென்பது வருத்தத்துககுரிய விடயம் மட்டுமல்லாமல் ஒரு துயரத் தொடர் கதையாகவுமுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் முடிவுற்ற நிலையில் செய்தி ஊடகங்கள் மிருசுவில் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படுவார் என்பதை அனுமானித்து வெளியிட்டிருந்தன. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மிகவும் அச்சமடைந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண கிளையில் முறைப்பாடு செய்து அதேவேளையில் ஊடகங்களுக்கும் அறிவித்தனர். ஆனால் தற்பொழுது நாடு முழுமையாக ஸ்தம்பிதமடைந்த நிலையில் காணப்படுவதால், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது எதிர்ப்பினையும் ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தக்கூடிய நிலையில் இல்லை.

COVID-19 என்ற வைரஸ் நோயிலிருந்து நாட்டை மீட்பதாகக் காட்டிக்கொண்டு, அரசமைப்பில் ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, சிறையிலிருக்கும் 'போர் வீரர்களை விடுவிப்பேன்' என்ற தனது தேர்தல் உறுதிமொழியினை ஜனாதிபதி தற்போது நிறைவேற்றுகிறார். இதை சரிவர நோக்குவோமாயின், கடந்த மாதம் இலங்கை அரசானது ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபைத் தீர்மானத்தின் வாக்குறுதிகளிலிருந்து முழுமையாக தங்களை விலக்கிக்கொண்டது. மேலும் ஜனாதிபதி இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் என யாரும் இல்லையெனவும் அவ்வாறு காணாமல் போனோரெனக் கருதப்படுபவர்கள் இறந்துவிட்டனர் எனவும் கூறினார். அவரது அரசானது போர்க் குற்றவாளிகளென சந்தேகிக்கப்படும் நபர்களை இராணுவத்தில் உயர் மட்ட பதவிகளை வகிக்க பதவி உயர்த்தியுள்ளது. இதில் ஜெனரல் சவேந்திர சில்வா COVID - 19 என்ற வைரஸ் நோயினை எதிர்த்துப் போராடி மக்களை மீட்பவரென புகழப்படுகிறார். சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்து வருகின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# மரண தண்டனை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வடமாகாணத்தில் மாத்திரம் வீதித் தடைகள் சோதனைச் சாவடிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது ஒரு படுகொலையாளி ஜனாதிபதியினால் மன்னிக்கப்பட்டு விடுதலையும் செய்யபட்டுள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் செயலானது பாதுகாப்புப் படையினர் மத்தியில் குற்றமிழைப்பவர்கள், அக் குற்றம் பாரதூரமானதாக இருந்து, நீதிமன்றம் அவர்களை குற்றவாளியாக தீர்ப்பளித்த போதிலும், குற்றஞ் சாட்டப்பட்ட படையினருக்கு தண்டனை வழங்கப்பட மாட்டாது என்ற செய்தியை பொதுமக்களுக்கு தெரிவிக்கின்றது. ஏற்கனவே பொலீஸார் உட்பட பாதுகாப்புபடையினர் தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமையை கொண்டவர்களாக கருதப்படுகின்ற சூழலில், இவர்கள் மிகவும் மோசமான நிலையில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கெதிராக மேலும் கொடூரங்களை மேற்கொள்ள அரசின் செயற்பாடுகள் மறைமுகமாக ஊக்கமளிக்கும்.

சட்டவாட்சி மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அமைப்புகளும் தனிநபர்களும் ஆகிய நாங்கள் ஆர்.எம். சுனில் ரத்நாயக்கவிற்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பினை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இசசெயலானது மேலும் சமூகததில் இராணுவமயமாக்கலை அதிகரிப்பதுடன் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையின்மை மற்றும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதில் எவ்விதமான சந்தேகமுமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.– என்று உள்ளது.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்,பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மனித உரிமைகள் அலுவலகம் – கண்டி, மனித எழுச்சி நிறுவனம், சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப் பொறுப்பகம், கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம், மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கம், கிராம அபிவிருத்தி நிலையம், சமூக அபிவிருத்தி நிறுவகம் – கண்டி, கைதிகளின் உரிமைகளுக்கான பாதுகாப்புக் குழு, இன்ஃபோம் – மனித உரிமைகளுக்கான தரவு மையம், ஊடக ஊழியர்களுக்கான தொழிற்சங்கங்களின் ஒன்றியம், நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம் – திருகோணமலை, 'ரைடஸ் நவ்' ஜனநாயகத்திற்கான கூட்டு, 'ரைட் டு லைப்' மனித உரிமைகளுக்கான நிலையம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், காணி மற்றும் விவசாய மறுசீர் அமைப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஆகிய அமைப்புகளே இணைந்து இந்த அறிக்கையை விடுத்துள்ளன.

# கடற்றொழிலாளர்களின் போக்குவரத்திற்கென விசேட பாஸ் நடைமுறை

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கொழும்பு,மார்ச்31

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடற்றொழிலாளர்கள் மற்றும் கடலுணவு வியாபாரிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை நீக்குவதற்கு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது அவரின் அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கடற்றொழில்சார் போக்குவரத்துக்களை மேற்கொள்வோரும் கடல்சார் உற்பத்திகளின் வியாபாரிகளும் தங்கள் பிரதேசங்களில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரயல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரை அணுகி அவர்களின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்று அதனை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்து போக்குவரத்து அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக கடற்றொழில் சமூகத்தினர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்பது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் இன்று காலை அமைச்சில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அவர் மேற்கொண்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அறிவிக்குமாறு அமைச்சின் செயலாளரை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய தரமான கடலுணவுகளை நியாயமான விலையில் மக்களுக்கு வழங்கும் செயற்பாடுகள் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சின் ஊடகப் பிரிவு இன்று நண்பகல் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.



